பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

# Cult 0f the Madurai Ochandamman Deity from Cultural Perspective

**Dr. M. Babynishanthini,** Assistant Professor of Tamil,
Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli, Tamil Nadu, India
**ORCiD: https://orcid.org/0009-0007-6605-967X**
**DOI: 10.5281/zenodo.20840875**

## Abstract

*In Tamil culture and society, the worship of clan deities holds an important place. It is a traditional practice and is connected with family, clan and social identity. This article examines the history, rituals, beliefs, and cultural aspects of this worship. The focus is on the Ochandamman temple in Madurai. The study describes the origin of Ochandamman worship and also explains its relationship with the clan people. It discusses the traditions seen in the worship methods. Moreover, it looks at the socio-cultural effects. The findings of this study show that Ochandamman clan deity worship is not merely a religious ritual. Instead, it works as a social institution and ensures clan unity, social integration, and the continuation of cultural traditions. Also, Ochandamman worship strengthens intergenerational cultural exchange among the people. It helps preserve social memories. Therefore, this article states that the clan deity worship at the Madurai Ochandamman temple is an important area for research. It helps us understand Tamil folk religious traditions and cultural identities in an effective way.*

**Keywords:** Clan Deity, Ochaandamman, Folk Deity Worship, Cultural Studies, Rituals, Beliefs, Madurai.

## References

[1] Amaravathi, K., and A. Tharani. *Thamizh Mannil Kulatheivangal*. Nithra Pathippagam, 2023.
[2] Gothandarama Sarma, T. S. *Maha Periyaval Tharisana Anubavangal*. Part 2, Vanathi Pathippagam, 2021.
[3] Jeyaraman, N. R. "Kulatheiva Thoortham Varalaru 1" *Santhipriya*. www.santhipriya.com Accessed 5 April 2026.
[4] Mani, K. *Namathu Kulatheivam*. Abayam Pathippagam, 2020.
[5] Chinnan Iya, A. *Pappapatti Ochantamman Kovilum Aachi Andayin Arulvakkum*. Sandhiya Pathippagam, 2017.
[6] *Thamizh OneIndia*. https://tamil.oneindia.com Accessed 5 April 2026.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# பண்பாட்டியல் நோக்கில் மதுரை ஒச்சாண்டம்மன் குலதெய்வ வழிபாட்டு முறை

**முனைவர் மெ. பேபி நிஷாந்தினி**, உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-6605-967X**

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழர் பண்பாட்டில் குலதெய்வ வழிபாடு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இது குடும்பம், குலம் மற்றும் சமூக அடையாளங்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு மரபுசார் வழிபாட்டு முறையாகும். இக்கட்டுரை மதுரை ஒச்சாண்டம்மன் கோவிலில் நடைபெறும் குலதெய்வ வழிபாட்டின் வரலாறு, சடங்குகள், நம்பிக்கைகள் மற்றும் அதன் பண்பாட்டியல் கூறுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, ஒச்சாண்டம்மன் வழிபாட்டின் தோற்றம், குல மக்களுடனான அதன் உறவு, வழிபாட்டு முறைகளில் காணப்படும் மரபுகள் மற்றும் சமூகப் பண்பாட்டு தாக்கங்கள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் ஆய்வின் முடிவுகள், ஒச்சாண்டம்மன் குலதெய்வ வழிபாடு வெறும் சமயச் சடங்காக இல்லாமல், குல ஒற்றுமை, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பண்பாட்டு மரபுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் ஒரு சமூக நிறுவனமாக விளங்குவதை வெளிப்படுத்துகின்றன. மேலும், இவ்வழிபாடு தலைமுறைகளுக்கு இடையிலான பண்பாட்டு பரிமாற்றத்தையும் சமூக நினைவுகளின் பாதுகாப்பையும் வலுப்படுத்துகிறது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, மதுரை ஒச்சாண்டம்மன் கோவிலின் குலதெய்வ வழிபாடு தமிழர் நாட்டுப்புறச் சமய மரபுகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான ஆய்வுக் களமாக அமைகிறது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** குலதெய்வம், ஒச்சாண்டம்மன், நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, பண்பாட்டியல், சடங்குகள், நம்பிக்கைகள், மதுரை.

## முன்னுரை

தமிழர் பண்பாட்டில் குலதெய்வ வழிபாடு என்பது தொன்மையான மற்றும் தனித்துவமான வழிபாட்டு மரபாகும். ஒவ்வொரு குடும்பமும் தங்களது மூதாதையர்கள் வழிபட்ட தெய்வத்தை குலதெய்வமாக ஏற்றுக்கொண்டு வழிபடுவது தமிழர் சமூகத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். குலதெய்வ வழிபாடு குடும்ப ஒற்றுமை, முன்னோர் நினைவு, சமூகப் பிணைப்பு மற்றும் ஆன்மீக நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒரு வாழ்வியல் முறையாக விளங்குகிறது. மதுரை மாவட்டத்தில் பல குடும்பங்களின் குலதெய்வமாக விளங்கும் ஒச்சாண்டம்மன், கிராமியத் தாய்தெய்வ வழிபாட்டின் முக்கிய வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறார். மதுரை ஒச்சாண்டம்மன் பெரிய கோவில், பக்தர்களின் ஆன்மீக மையமாக மட்டுமல்லாமல், பண்பாட்டு மரபுகள் பாதுகாக்கப்படும் ஒரு சமூக நிறுவனமாகவும் விளங்குகிறது. இக்கட்டுரை ஒச்சாண்டம்மன் குலதெய்வ வழிபாட்டின் வரலாறு, சடங்குகள், நம்பிக்கைகள் மற்றும் அதன் பண்பாட்டியல் முக்கியத்துவத்தை ஆராய்கிறது.

## குலதெய்வ வழிபாடு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

ஒரு குறிப்பிட்ட குடும்பம், வம்சம் அல்லது தலைமுறை சார்ந்த மூதாதையர்கள் மற்றும் அவர்களின் குலத்தை வழிநடத்தும் காவல் தெய்வத்தை வழிபடும் முறையாகும். இது தலைமுறை தலைமுறையாக ஒரே இரத்த உறவைக் கொண்டவர்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் ஒரு முறையாகும். இதனை,

> **குலம் தெரியாமல் போனாலும், குலதெய்வம் தெரியாமல் போகக்கூடாது என்று சொல்வார்கள். வம்சம் வாழையடி வாழையாக வளர குலதெய்வத்தின் அருள் நிச்சயம் தேவை. தெய்வங்களில் வலிமையான தெய்வம் குலதெய்வம். நமது குடும்பத்தை காக்க வழிபாட்டு தெய்வத்தினை நமது முன்னோர்கள் காலங்காலமாக கடைபிடித்து வழிபட்டு வந்துள்ளனர். (தமிழ் மண்ணில் குலதெய்வங்கள், ப. 18)**

என கே. அமராவதி மற்றும் ஏ.தரணி தனது கருத்தை தெரிவித்துள்ளனர். வருடத்திற்கு ஒருமுறையாவது குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வழிபடுவது குடும்ப ஒற்றுமையை வலுப்படுத்துகிறது. மேலும், முன்னோர்களின் ஆசீர்வாதமும் தெய்வ அருளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இதனால் குடும்பத்தில் அமைதி, செழிப்பு, ஆரோக்கியம் மற்றும் நல்லிணக்கம் நிலவும் என மக்கள் கருதுகின்றனர். அதோடு, இளைய தலைமுறையினர் தங்கள் குல மரபுகளையும் பாரம்பரியத்தையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கிறது. எனவே, குலதெய்வ வழிபாடு குடும்ப நலனையும் சந்ததியினரின் சிறப்பான வாழ்வையும் பேணும் ஒரு முக்கியமான பாரம்பரிய வழிபாட்டு முறையாகக் கருதப்படுகிறது.

> **கோத்திரம் என்பது தந்தை வழி பாட்டன்-பாட்டி வழியே தொடரும் ஒரு சமூக உளவியல் ஒழுங்குமுறை". அந்த வரிசையில் முன்னோர்கள் வணங்கி வந்த தெய்வமே குலதெய்வம் ஆகும். வருடம் ஒருமுறையாவது குடும்பத்தோடு சென்று குலதெய்வத்தை வழிபட்டால், குலம் தழைத்து, சந்ததியினர் சிறப்பான வாழ்க்கையைப் பெறுவார்கள். (மகா பெரியவா தரிசன அனுபவங்கள், ப. 252)**

என்று காஞ்சி காமகோடி பீடத்தின் மறைந்த மகா பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி வலியுறுத்தியுள்ளார்.

### குலதெய்வ வழிபாட்டின் வரலாற்றுப் பின்னணி

தமிழகத்தில் குலதெய்வ வழிபாட்டின் தோற்றம் மிகவும் பழமையானது. சங்ககாலச் சமூகத்தில் மக்கள் இயற்கை வழிபாடு, வீர வழிபாடு மற்றும் முன்னோர் வழிபாட்டை மேற்கொண்டனர். காலப்போக்கில் முன்னோர்களால் வழிபடப்பட்ட தெய்வங்கள் குடும்பங்களின் பாதுகாவலர்களாகக் கருதப்பட்டு குலதெய்வங்களாக நிலைபெற்றன. குலதெய்வம் என்பது ஒரு குடும்பத்தின் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறது. திருமணம், குழந்தைப்பேறு, கல்வி, தொழில், வீடு கட்டுதல் போன்ற வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளுக்கு முன்பாக குலதெய்வத்தை வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இதன் மூலம் குடும்பத்தினர் தங்கள் மூதாதையர்களின் மரபைத் தொடர்கின்றனர்.

> **குலதெய்வம் அல்லது குடும்ப தெய்வம் என்பது தலைமுறை தலைமுறையாக ஒவ்வொரு குடும்பத்தினரும் வழிபட்டு வரும் ஆண் அல்லது பெண் தெய்வமாகும். (குலதெய்வ தோற்றம் வரலாறு, ப. 32)**

எனும் என் ஆர் ஜெயராமன் அவர்களுடைய கருத்தை வழிமொழிகிறேன்.

### ஒச்சாண்டம்மன் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

நாயக்கர் காலத்திலிருந்தே வழிபாட்டில் உள்ள ஒச்சாண்டம்மன் கோயில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள கருமாத்தூர், பாப்பாபட்டி ஆகிய ஊர் மக்களுக்கு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

குலதெய்வமாக விளங்குகின்றது. பாப்பாபட்டியில் அருள்பாலிக்கும் ஒச்சாண்டம்மன் எனும் பெயர்பெற்ற ஆண்டாயி ஆச்சி முக்கிய குலதெய்வங்களில் ஒருவராக விளங்குகிறார். தன்மானத்தைக் காக்க பொங்கும் பொங்கலைத் தலையில் சுமந்து நடந்த பெண்ணே, தெய்வமாக மாறி இப்பகுதியில் பல கோவில்களைக் கொண்டு வளர்ந்ததுதான் இந்த ஆலயத்தின் வரலாறாகும். கருமாத்தூர் பகுதியைச் சேர்ந்த ஆண்டாயி என்ற பெண், பாப்பாபட்டி கிராமத்தைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். ஒருமுறை கருமாத்தூரில் உள்ள ஒச்சாண்டம்மன் கோவிலில் பொங்கல் வைத்தபோது, முறைப்படி பூசாரிகள் பொங்கலில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டனர். தன் புகுந்த வீட்டாரின் பொங்கலை பூசாரி கேட்பது தன்மானத்திற்கு இழுக்கு என ஆண்டாயி கருதினாள். கடும் கோபமடைந்த ஆண்டாயி, பொங்கும் பொங்கலைத் தலையிலேயே வைத்துக் கொண்டு பாப்பாபட்டியை நோக்கி நடந்தாள். அங்குள்ள மருதமரச் சோலையில் சங்கப் புதரின் நடுவே பொங்கல் பானையை வைத்து தெய்வீகமானாள். தொடக்கத்தில் ஆண்டாயியின் வழிவந்தவர்கள் வணங்கி வந்தனர். பின்னர், உத்தப்பநாயக்கனூர் ஜமீன்தார் ஒச்சாண்டம்மன் கோவிலுக்காக 96 குழி நிலத்தை எழுதி மானியமாக வழங்கினார். பாப்பாபட்டியில் தற்போது ஒச்சாண்டம்மனுக்குக் கல்லால் ஆன யானை வாகனத்துடன் கூடிய பிரம்மாண்டமான கருவறை மற்றும் பெரிய கோயில் எழுப்பப்பட்டு அப்பகுதி மக்களின் காவல் தெய்வமாகத் திகழ்கிறது. பாப்பாபட்டி மட்டுமல்லாது கருமாத்தூர் உள்ளிட்ட பிற பகுதிகளிலும் ஒச்சாண்டம்மன் ஆலயம் வழிபாட்டுத் தலங்களாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**மதுரை ஒச்சாண்டம்மன் பெரிய கோவிலின் சிறப்புகள்**

மதுரை ஒச்சாண்டம்மன் பெரிய கோவில் பல பக்தர்களின் குலதெய்வத் தலமாக விளங்குகிறது. இக்கோவில் மத நம்பிக்கையின் மையமாக மட்டுமல்லாமல் சமூக மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளின் மையமாகவும் உள்ளது. இக்கோயிலின் கருவறையின் முன்பாக கல்லால் வடிக்கப்பட்ட பிரம்மாண்ட யானை வாகனம் அமைந்துள்ளது இதன் தனிச்சிறப்பாகும். கோயில் மண்டபத் தூண்களில் இராமன், கிருஷ்ணன், விஷ்ணு, சிவலிங்கம், முனிவர்கள் மற்றும் காவல் தெய்வங்களான கருப்பசாமிகளின் கலைநயமிக்க புடைப்புச் சிற்பங்களும் வடிக்கப்பட்டுள்ளன. கூட்டு வழிபாடு நடத்தும் வகையில் இங்கு மூலவரான ஒச்சாண்டியம்மனுடன் பெரியகருப்பு, காளாஞ்சி கருப்பு, சின்னசாமி, கருந்தவசி, பேச்சியம்மன், அக்கினிதங்கு மற்றும் மதனதங்கு ஆகிய பல தெய்வங்களுக்கும் தனித்தனி சன்னதிகள் அமைந்துள்ளன. பன்னிரெண்டு கிலோ மீட்டர் பாதயாத்திரை ஊர்வலம் மாசி சிவராத்திரி திருவிழாவின் போது, உசிலம்பட்டி சின்ன கருப்பசாமி கோயிலில் இருந்து அம்மனின் ஆடை, ஆபரணங்கள் அடங்கிய புகழ்பெற்ற மாசிப் பெட்டிகள் பூசாரிகளால் சுமக்கப்பட்டு, 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பாப்பாபட்டி கோயிலுக்கு கால்நடையாகவே கொண்டுவரப்படும். இந்த மாசிப் பெட்டி ஊர்வலம் உசிலம்பட்டி நகர் எல்லைக்குள் வரும்போது, வழக்கமாக உள்ளூர் முக்கிய பிரமுகர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் திரண்டு நின்று எலுமிச்சம்பழம் கொடுத்து மரியாதையுடன் வரவேற்பது தனி மரபாக பின்பற்றப்பட்டுவருகிறது. மாசிப் பச்சை வழிபாட்டை சிவராத்திரி அன்று பக்தர்கள் "பச்சை கொண்டு வருதல்" என்ற பாரம்பரிய சடங்கினைச் செய்து இரவு முழுவதும் விழித்திருந்து அம்மனை வழிபடுகின்றனர்.

**ஒச்சாண்டம்மன் குலதெய்வ வழிபாட்டின் சடங்குகள்**

குலதெய்வ வழிபாட்டின் முதன்மையான சடங்கு அம்மனை தரிசித்து அர்ச்சனை செய்வதாகும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாகக் கோவிலுக்குச் சென்று

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

வழிபடுவது வழக்கமாக உள்ளது. பால், மஞ்சள், சந்தனம், பன்னீர் மற்றும் பிற புனிதப் பொருட்களால் அபிஷேகம் செய்யப்படுகிறது. அபிஷேகம் ஆன்மீகத் தூய்மையையும் அருளையும் குறிக்கும் சடங்காகக் கருதப்படுகிறது. பெண்கள் மாவிளக்கு ஏற்றி அம்மனை வழிபடுகின்றனர். இது குடும்ப நலன் மற்றும் வளமைக்காக மேற்கொள்ளப்படும் முக்கிய நேர்த்திக்கடனாகும். குழந்தைகளின் முதல் முடி இறக்குதல் குலதெய்வக் கோவிலில் நடைபெறுவது வழக்கமாகும். இது தெய்வ அருளுக்கான நன்றிக்கடனாகக் கருதப்படுகிறது. வேண்டுதல் நிறைவேறிய பின்னர் பக்தர்கள் அன்னதானம் வழங்குகின்றனர். இது பகிர்வு மற்றும் சமூக ஒற்றுமையின் அடையாளமாகும்.

**திருவிழாக்கள் மற்றும் சமூகப் பங்கு**

ஒச்சாண்டம்மன் கோவிலில் நடைபெறும் திருவிழாக்கள் மக்களின் மத உணர்வுகளை வெளிப்படுத்துவதோடு சமூக ஒற்றுமையையும் வலுப்படுத்துகின்றன. மாசி மகாசிவராத்திரி, ஆடித் திருவிழா, தை வெள்ளி, பங்குனித் திருவிழா போன்ற திருவிழாக்கள் நடைபெறும். ஆடி மாதத்தில் நடைபெறும் அம்மன் திருவிழா மிகவும் சிறப்பானது.

**கொடியேற்றம்**

ஒச்சாண்டம்மன் கோயில்களில் நடைபெறும் ஆண்டுத் திருவிழாவின் தொடக்க நிகழ்வாக கொடியேற்றம் கருதப்படுகிறது. விழா ஆரம்பிக்கும் நாளில் அம்மனுக்குச் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் பூஜைகள் நடைபெறும். பின்னர் மங்கள இசை, மேளதாளங்கள் முழங்க, அம்மனின் அருள் சின்னமாக விளங்கும் திருக்கொடி கோயிலின் கொடிமரத்தில் ஏற்றப்படுகிறது. கொடியேற்றம் நடைபெற்றவுடன் திருவிழா நாட்கள் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. கொடியேற்றத்தின் மூலம் அம்மனின் அருள் ஊர்மக்களுக்கும் குல மக்களுக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. கொடி ஏற்றப்பட்ட காலத்தில் பக்தர்கள் விரதம் இருந்து வழிபடுவதும் வழக்கமாகும். மேலும், குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி அம்மனை வணங்கி நேர்த்திக்கடன்களைச் செலுத்துகின்றனர். கொடியேற்றம் என்பது தெய்வத்தின் இருப்பையும் அருளையும் பொதுமக்களுக்கு அறிவிக்கும் ஒரு புனிதச் சடங்காகக் கருதப்படுகிறது. அம்மன் திருவிழாவின் மற்ற நிகழ்வுகளான ஊர்வலம், பொங்கல் வைத்தல், முளைப்பாரி எடுத்தல் மற்றும் அன்னதானம் போன்றவை இதனைத் தொடர்ந்து நடைபெறுகின்றன.

**சிறப்பு பூஜைகள்**

திருவிழா நடைபெறும் அனைத்து நாட்களிலும் அம்மனுக்குத் தனித்துவமான சிறப்பு பூஜைகள் நடைபெறும். கிராமிய முறைப்படியும், ஆகம விதிப்படியும் காலை மற்றும் மாலை வேளைகளில் விசேஷ கால பூஜைகள் செய்யப்படும். உலக நன்மைக்காகவும், விவசாயம் செழிக்கவும், மழை வேண்டியும் சிறப்பு கூட்டுப் பிரார்த்தனைகளும், யாகங்களும் நடத்தப்படுவது இத்தலத்தின் வழக்கமாகும்.

**அபிஷேகங்கள்**

அம்மனின் அருள் வேண்டி நவதானியங்கள் மற்றும் நறுமணப் பொருட்களால் தொடர் அபிஷேகங்கள் செய்யப்படும். பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன் மற்றும் பஞ்சாமிர்தம் கொண்டு மூலவர் ஒச்சாண்டம்மனுக்கு மகா அபிஷேகம் நடைபெறும். அபிஷேகத்தின் நிறைவாக, அம்மன் தங்கக் கவசம் அல்லது சிறப்பு மலர் அலங்காரத்தில் ஜொலிக்கும் காட்சி பக்தர்களைப் பரவசப்படுத்தும்.

**ஊர்வலங்கள்**

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

திருவிழாவின் மிக உன்னதமான பகுதி அம்மனின் வீதி உலா மற்றும் ஊர்வலங்கள் ஆகும்.

சிறப்பு வாகனங்களில் அலங்கரிக்கப்பட்ட அம்மன், பாரம்பரிய கிராமிய இசை மற்றும் நாதஸ்வர ஒலியுடன் வீதிகளில் ஊர்வலமாக எழுந்தருளுவார். பக்தர்கள் தங்கள் வீடுகளின் வாசலில் மாவிளக்கு எடுத்தும், தேங்காய் பழம் படைத்தும் அம்மனை நெகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். இக்கோவிலின் பாரம்பரிய வழக்கப்படி, உசிலம்பட்டியிலிருந்து பாப்பாபட்டிக்கு ஆபரணங்கள் அடங்கிய புனிதப் பெட்டிகளை ஊர்வலமாகக் கொண்டு வரும் 'பெட்டி எடுக்கும் திருவிழா' இங்கு மிகவும் உணர்வுப்பூர்வமாக நடத்தப்படும் முதன்மை நிகழ்வாகும்.

**கலை நிகழ்ச்சிகள்**

பண்பாட்டையும் பக்தியையும் இணைக்கும் விதமாகப் பல்வேறு பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் கோவில் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. கரகாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம் மற்றும் சிலம்பாட்டம் போன்ற வீரக் கலைகள் நடத்தப்படும். ஆன்மீகச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் மற்றும் அம்மன் புகழ்பாடும் பக்தி இன்னிசை கச்சேரிகள் இரவு நேரங்களில் பக்தர்களைக் கவரும் வண்ணம் அரங்கேறும். மதுரை பாப்பாபட்டி ஒச்சாண்டம்மன் கோவில் வழிபாடானது இப்பகுதி மக்களின் குலதெய்வ வழிபாடாக விளங்குவதால், இந்த ஆடி மாத மற்றும் விசேஷ திருவிழாக்கள் ஒட்டுமொத்தக் கிராமங்களின் ஒற்றுமையையும், பாரம்பரியத்தையும் பறைசாற்றும் திருவிழாவாகத் திகழ்கிறது

**ஒச்சாண்டம்மன் வழிபாட்டின் முக்கிய நம்பிக்கைகள்**

மக்கள் மத்தியில் பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன. ஒச்சாண்டம்மன் தீய சக்திகள், பில்லி, சூனியம் போன்றவற்றை அண்டவிடாமல் தன் பக்தர்களைப் பாதுகாப்பதாக நம்பப்படுகிறது. அம்மனுடன் சேர்ந்து பெரிய கருப்பு, காளாஞ்சி கருப்பு, மாயாண்டி சாமி போன்ற காவல் தெய்வங்களும் குடும்பத்தைக் காக்கும் அரணாக விளங்குவதாக ஐதீகம். நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லாதவர்கள் அம்மனை வேண்டி, தொட்டில் கட்டுதல் மற்றும் மொட்டை அடித்தல் போன்ற நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். அம்மை நோய்கள் மற்றும் வயிற்று உபாதைகள் போன்ற பல்வேறு நோய்களிலிருந்து விடுபட, அம்மனுக்குப் பொங்கல் வைத்துப் படைத்து வழிபடுகின்றனர். குலதெய்வமான ஒச்சாண்டம்மன் தனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கண் கண்ட தெய்வமாக இருந்து தீய சக்திகள் மற்றும் ஆபத்துகளில் இருந்து காப்பதாக மக்கள் தீவிரமாக நம்புகின்றனர்தொழில் மற்றும் விவசாயத்தில் முன்னேற்றம் கிடைக்கும் என்று கருதப்படுகிறது. இந்த நம்பிக்கைகள் தலைமுறைகளாக வாய்மொழி மரபின் மூலம் பரவியுள்ளன.

**நேர்த்திக்கடன் செலுத்துதல்**

பக்தர்கள் தங்களின் வேண்டுதல்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காகவும், நிறைவேறிய வேண்டுதல்களுக்கு நன்றிக்கடனாகவும் அம்மனிடம் நேர்த்தி செய்கின்றனர். குடும்ப நலம், திருமணம், குழந்தைப்பேறு, கல்வி, தொழில் முன்னேற்றம், நோய் நீக்கம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக நேர்த்திக்கடன்கள் வேண்டப்படுகின்றன. வேண்டுதல் நிறைவேறிய பிறகு, பக்தர்கள் கோயிலுக்குச் சென்று பொங்கல் வைத்தல், மாவிளக்கு எடுத்தல், தேங்காய் உடைத்தல், அன்னதானம் செய்தல், பட்டாடை சாத்துதல், சிறப்பு அபிஷேகம் அர்ச்சனை செய்தல் மற்றும் சேவல், ஆடு என சில உயிரினங்களை பலியிடுதல் போன்ற வழிகளில் நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர். சிலர் தங்களின் பொருளாதார வசதிக்கு ஏற்ப காணிக்கை வழங்குவதும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாறு நேர்த்திக்கடன்

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

செலுத்துவது அம்மனின் அருளுக்கான நன்றியை வெளிப்படுத்தும் செயலாக மட்டுமல்லாமல், பக்தர்களின் நம்பிக்கையையும் ஆன்மிகப் பற்றையும் எடுத்துக்காட்டுகிறது.

**பொங்கல் வைத்தல்**

நேர்த்திக்கடன்களில் முக்கியமான ஒன்று பொங்கல் வைத்தல் புதிய மண்பானையில் அரிசி, பால், வெல்லம் ஆகியவற்றைக் கொண்டு பொங்கல் சமைத்து அம்மனுக்குப் படையலிடுகின்றனர். பொங்கல் பொங்கி வழிவது வளமை மற்றும் செழிப்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

**மாவிளக்கு எடுத்தல்**

அரிசி மாவும் வெல்லமும் கலந்து மாவிளக்கு செய்து அதில் தீபம் ஏற்றி அம்மனுக்குப் படைக்கின்றனர். இது தெய்வ அருளைப் பெறுவதற்கும் குடும்ப நலன் வேண்டுவதற்குமான வழிபாடாக அமைகிறது.

**தேங்காய் உடைத்தல்**

தீய சக்திகள் நீங்கி நன்மை பெருக வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இம்முறை மேற்கொள்ளப்படுகிறது. தேங்காய் உடைப்பது அகந்தையை நீக்கி இறைவனிடம் முழுமையாக சரணடைவதைக் குறிக்கும் சடங்காகவும் கருதப்படுகிறது.

**அன்னதானம் செய்தல்**

தானத்தில் மிகச் சிறந்த தானமாக அன்னதானம் கருதப்படுகிறது. பக்தர்கள் பொதுமக்கள் மற்றும் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவு வழங்குவதன் மூலம் தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். இது பகிர்வு மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்துகிறது.

**பட்டாடை சாத்துதல்**

வழிபாட்டில், அம்மனுக்குப் புதிய ஆடைகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் காணிக்கையாக வழங்கப்படுகின்றன. இது அம்மனின் அருளுக்கான நன்றியை வெளிப்படுத்தும் செயலாக அமைகிறது. சிறப்பு அபிஷேகம் மற்றும் அர்ச்சனை செய்தல் வழிபாட்டின் மற்றொரு முக்கிய அம்சமாகும். பால், சந்தனம், மஞ்சள், இளநீர் போன்ற பொருட்களால் அபிஷேகம் செய்து, சிறப்பு அர்ச்சனைகள் நடத்தி அம்மனின் அருளைப் பெறுகின்றனர்.

**உயிர் பலியிடல்**

ஒரு சில பகுதிகளில் மரபு வழக்கத்தின் அடிப்படையில் சேவல், ஆடு போன்ற உயிர் பலியிடும் சடங்குகளும் நேர்த்திக்கடன் செலுத்தும் முறையாகக் காணப்படுகின்றன. இச்சடங்குகள் தெய்வத்திற்கு நன்றியறிதல் மற்றும் வேண்டுதல் நிறைவேற்றத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், இவ்வகை நடைமுறைகள் பகுதி, காலம் மற்றும் சமூக மரபுகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு மரபில் உயிர்ப்பலி என்பது தெய்வத்தின் சக்தியைப் போற்றுவதற்கும், தெய்வ அருளுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் சடங்காகக் கருதப்படுகிறது. பலியிடப்பட்ட உயிரினத்தின் இறைச்சி பின்னர் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதுடன், சில இடங்களில் படையலாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**ஆட்டுக்கிடாய் பலியிடல்**

நேர்த்திக்கடன் சடங்குகளில் ஆட்டுக்கிடாய் பலியிடல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இச்சடங்கு நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு மரபுகளின் தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது. பக்தர்கள் தாங்கள் மேற்கொண்ட வேண்டுதல்கள் நிறைவேறிய பின்னர், தெய்வத்திற்கு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

நன்றியுணர்வை வெளிப்படுத்தும் விதமாக ஆட்டுக்கிடாயைப் பலியிடுகின்றனர். ஆட்டுக்கிடாய் பலியிடுதல் என்பது வெறும் சடங்கு நடவடிக்கையாக மட்டுமல்லாமல், தெய்வத்தின் மீதான பக்தி, அச்சம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் வெளிப்பாடாகவும் அமைகிறது. பலியிடப்பட்ட ஆட்டின் இறைச்சி உறவினர்கள் மற்றும் பக்தர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவது சமூக ஒற்றுமையையும் உறவுமுறைகளையும் வலுப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வாகக் கருதப்படுகிறது. மானிடவியல் நோக்கில், இச்சடங்கு மனிதன், தெய்வம் மற்றும் சமூக உறவுகளுக்கிடையேயான தொடர்பினை வெளிப்படுத்தும் ஒரு குறியீட்டு வழிபாட்டு முறையாக விளங்குகிறது.

**சேவல் பலியிடல்**

சேவல் பலியிடுதலும் நேர்த்திக்கடன் செலுத்தும் முக்கியமான சடங்குகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. நாட்டுப்புறச் சமய நம்பிக்கைகளின் அடிப்படையில், சேவல் பலியிடுதல் தீய சக்திகளை அகற்றி தெய்வ அருளைப் பெறுவதற்கான வழிபாட்டு முறையாகக் கருதப்படுகிறது. வேண்டுதல் நிறைவேறிய பின்னர் பக்தர்கள் சேவலைப் பலியிட்டு தங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். இச்சடங்கு தெய்வத்திற்கு நன்றியறிதலை வெளிப்படுத்துவதோடு, குல மரபுகளின் தொடர்ச்சியையும் எடுத்துக்காட்டுகிறது. சேவல் பலியிடுதல் வழியாக தெய்வத்தின் பாதுகாப்பும் அருளும் குடும்பத்திற்கு நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை பக்தர்களிடையே நிலவுகிறது. மேலும், இவ்வகை வழிபாட்டு முறைகள் நாட்டுப்புற மக்களின் சமய நம்பிக்கைகள், பண்பாட்டு மரபுகள் மற்றும் சமூக வாழ்க்கை ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையவையாக உள்ளன. எனவே, சேவல் பலியிடுதல் ஒச்சாண்டம்மன் குலதெய்வ வழிபாட்டில் நேர்த்திக்கடன் செலுத்தும் ஒரு மரபுசார் வழிபாட்டு முறையாக விளங்குகிறது.

**பெண்களும் ஒச்சாண்டம்மன் வழிபாடும்**

ஒச்சாண்டம்மன் வழிபாட்டில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானது. பெண்கள் விரதம் இருந்து அம்மனை வழிபடுகின்றனர். குடும்ப நலனுக்காக மாவிளக்கு ஏற்றுதல், பூஜை ஏற்பாடுகள் செய்தல், பக்திப் பாடல்கள் பாடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். பெண்களின் இந்தப் பங்கேற்பு தாய்தெய்வ வழிபாட்டின் சமூக அடித்தளத்தை வலுப்படுத்துகிறது.

**பண்பாட்டியல் நோக்கில் ஒச்சாண்டம்மன் வழிபாடு**

பண்பாட்டியல் பார்வையில் குலதெய்வ வழிபாடு என்பது வெறும் மதச் செயல்பாடு அல்ல. அது சமூக அமைப்பின் ஒரு பகுதியாகும்.

**குடும்ப உறவுகளை வலுப்படுத்துதல்**

வாழ்வாதாரத்திற்காகப் பல்வேறு ஊர்களில் வாழும் குடும்ப உறுப்பினர்கள், திருவிழா காலத்தில் சொந்த ஊருக்குத் திரும்புகின்றனர். அண்ணன், தம்பி, பங்காளி எனப் பல தலைமுறை உறவினர்கள் ஒரே இடத்தில் சந்தித்து தங்கள் மகிழ்ச்சியையும், துக்கத்தையும் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த வழிபாட்டு சடங்குகள் குடும்பங்களுக்குள் இருக்கும் மனஸ்தாபங்களை நீக்கி, பாசத்தையும் ஈடுபாட்டையும் அதிகமாக்குகிறது.

**முன்னோர் நினைவுகளைப் பாதுகாத்தல்**

ஒச்சாண்டம்மன் வழிபாடு என்பது வெறும் தெய்வ வழிபாடு மட்டுமல்ல; அது நம் முன்னோர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்த வாழ்க்கை நெறிமுறை. நமக்கு முன்னால் வாழ்ந்து, நம் குடும்பத்தை உருவாக்கிய முன்னோர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக இது அமைகிறது. இந்த வழிபாட்டின் மூலம், இளம் தலைமுறையினருக்குத் தங்களின் வம்சாவளி மற்றும் முன்னோர்களின் பெருமைகள் தடையின்றி கொண்டு சேர்க்கப்படுகின்றன

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**நாட்டுப்புற மரபுகளைத் தொடரச் செய்தல்**

திருவிழாவின் போது நடத்தப்படும் காப்புக்கட்டுதல், முளைப்பாரி எடுத்தல், கரகம் தூக்குதல் மற்றும் கிடா வெட்டுதல் போன்ற பாரம்பரிய சடங்குகள் மாறாமல் பின்பற்றப்படுகின்றன. உடுக்கை அடித்தல், பம்பை இசைத்தல், சாமி ஆட்டம் போன்ற தூய நாட்டுப்புறக் கலைகள் இத்திருவிழாக்களில் இன்றும் உயிர்ப்போடு இருக்கின்றன. நவீனமயமாகும் உலகில், பல நூற்றாண்டுகள் பழமையான நமது வழிபாட்டு முறைகள் அழியாமல் தொடர இதுவே முதன்மைக் காரணம்.

**சமூக ஒற்றுமையை வளர்த்தல்**

திருவிழாவை நடத்துவதில் ஊரில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும், வெவ்வேறு பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுத்தும் போது அவர்களிடையே பொறுப்புணர்வு வெளிப்படுகிறது. சாதி, மத, பொருளாதாரப் பாகுபாடுகளைக் கடந்து, ஒச்சாண்டம்மனின் பிள்ளைகள் என்ற ஒற்றை உணர்வோடு மக்கள் ஒன்று கூடி அன்னதானம் உள்ளிட்ட காரியங்களைச் செய்யும் சமத்துவ உணர்வை வெளிக்கொண்டுவருகிறது. ஊர் கூடித் தேர் இழுப்பது போல, எல்லாரும் இணைந்து திருவிழாவை நடத்துவதால் கிராமத்திற்குள் நல்லிணக்கமும் ஒற்றுமையும் ஏற்படுகிறது.

**கிராமிய கலாச்சாரத்தைப் பாதுகாத்தல்**

கிராமிய தெய்வங்கள் பெரும்பாலும் இயற்கையோடும், மண்ணோடும் தொடர்புடையவை. இந்த வழிபாடு மண்ணின் பெருமையையும், நீர்நிலைகளையும், மரங்களையும் மதிக்கும் பண்பை வளர்க்கிறது. அம்மனின் வரலாற்றுப் பாடல்களும், கதைகளும் வாய்மொழி மரபாகப் பாடப்பட்டு, நம் மண்ணின் உண்மையான கலாச்சாரத்தை அப்படியே பிரதிபலிக்கின்றன. உலகமயமாக்கலில் நம் தனித்துவத்தை இழக்காமல், நாம் யார் என்பதை நமக்கு உணர்த்தும் கலாச்சாரப் பாதுகாப்பு அரணாகவும், அடையாளமாகவும் இவ்வழிபாடு திகழ்ந்துவருகிறது. திருவிழாக்களின் போது குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடுவது சமூக உறவுகளை மீண்டும் புதுப்பிக்கும் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

**நவீன காலத்தில் குலதெய்வ வழிபாடு**

நவீன காலத்திலும் குலதெய்வ வழிபாடு மக்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இது குடும்ப மரபுகளையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்க உதவுகிறது. குலதெய்வ வழிபாடு குடும்ப உறுப்பினர்களிடையே ஒற்றுமையையும் பாசத்தையும் வளர்க்கிறது. முன்னோர்களின் நினைவுகளையும் அவர்களின் வாழ்க்கை நெறிகளையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கிறது. மன அமைதி மற்றும் ஆன்மீக நம்பிக்கையை வழங்குவதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது. வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள தன்னம்பிக்கையை அளிக்கிறது. குடும்ப விழாக்கள் மற்றும் ஒன்றுகூடல்களின் மூலம் உறவுகளை வலுப்படுத்துகிறது. சமூக மற்றும் கலாச்சார அடையாளத்தைப் பாதுகாக்க உதவுகிறது. இளைஞர்கள் தங்கள் வேர்களையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள வழிவகுக்கிறது. எனவே, நவீன காலத்திலும் குலதெய்வ வழிபாடு அவசியமான ஒரு பாரம்பரிய வழக்கமாகத் திகழ்கிறது.

**முடிவுரை**

மதுரை ஒச்சாண்டம்மன் பெரிய கோவிலில் நடைபெறும் குலதெய்வ வழிபாடு தமிழர் பண்பாட்டு மரபின் முக்கிய அங்கமாகும். இது குடும்ப மரபு, முன்னோர் நினைவு, சமூக ஒற்றுமை மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளை ஒருங்கிணைக்கும் ஒரு வாழ்வியல் அமைப்பாக விளங்குகிறது. ஒச்சாண்டம்மன் வழிபாட்டின் மூலம் மக்கள் தங்கள் குடும்ப வேர்களுடன்

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

தொடர்பைத் தக்க வைத்துக்கொள்வதோடு, பண்பாட்டு அடையாளத்தையும் பாதுகாத்து வருகின்றனர். எனவே, மதுரை ஒச்சாண்டம்மன் பெரிய கோவில் குலதெய்வ வழிபாடு என்பது வெறும் சமய மரபு மட்டுமல்ல, அது தமிழர் சமூகத்தின் வரலாறு, நம்பிக்கை, உறவுமுறை மற்றும் பண்பாட்டு தொடர்ச்சியை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான சமூகச் சின்னமாகும்.

**குறிப்புகள்**

[1] அமராவதி, கே., மற்றும் ஏ .தரணி. *தமிழ் மண்ணில் குலதெய்வங்கள்.* நித்ரா பதிப்பகம், 2023.

[2] கோதண்டராம சர்மா, டி.எஸ். *மகாப் பெரியவாள் தரிசன அனுபவங்கள்.* பாகம் 2, வானதி பதிப்பகம், 2021.

[3] ஜெயராமன், என் .ஆர் .“குலதெய்வ தோற்றம் வரலாறு – 1.” *Santhipriya*. www.santhipriya.com அணுகப்பட்டது 5 சித்திரை 2026.

[4] மணி, க. *நமது குலதெய்வம்.* அபயம் பதிப்பகம், 2020.

[5] சின்னன் ஐயா, அ. *பாப்பாபட்டி ஒச்சாண்டம்மன் கோவிலும் ஆச்சி ஆண்டாயின் அருள்வாக்கும்.* சந்தியா பதிப்பகம், 2017.

[6] *தமிழ் ஒன்இந்தியா.* https://tamil.oneindia.com அணுகப்பட்டது 5 சித்திரை 2026.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி**: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.